1984 மார்ச் 6]

மதுரையில் பல் மருத்துவக் கல்லூரி அமைக்கும் திட்டம்.

188—*வினா எண். 12818—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் பல் மருத்துவக் கல்லூரி ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) பல் மருத்துவம் பயின்றவர்களை மாவட்ட, தாலுகா தலைநகர்களுக்கு அனுப்பும் உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே : (அ) மற்றும் (ஆ) : இது பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, இந்த பல் மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் கிராமங்களுக்குச் சென்று பொது மக்களுக்கு எப்படிப் பல் வைத்தியம் செய்வது என்ற பயிற்சியை அளிக்கக்கூடிய முறையைக் கொண்டு வர செயற்குறிப்பு இருக்கிறதா ? மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது நம்முடைய மாநிலத்தில் பல்நோய்த் தடுப்பு எந்த நிலையில் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு தொடர்பு இல்லை. இன்னொரு பல் மருத்துவக் கல்லூரி அமைக்கும் செயற் குறிப்பு உண்டா என்பது தான் மூலக் கேள்வி. இன்னொரு பல் மருத்துவக் கல்லூரி அமைக்கவேண்டுமென்றால் 1 கோடியே 50 லட்ச ரூபாய் நான்-ரெக்கரிங் என்ற முறையிலே செலவாகும். எக்விப்மெண்ட்ஸிற்கு 20 லட்ச ரூபாயும், ஸ்டாஃபிற்கு 20 லட்சம் ரூபாயும் செலவாகும். இதை மதுரையில் அமைக்கவேண்டுமென்று நாம் தீவிரமாக இருக்கிறோம். அதற்கான செயற்குறிப்புகளை சேகரித்துக்கொண்டிருக்கிறோம். விரைவில் முடிக்கப்படும் என்ற நம்பிக்கை அரசாங்கத்திற்கு இருக்கிறது. அதே நேரத்திலே கிராமப் பகுதிகளிலே பல் வைத்தியப் பரிசோதனை முகாம்கள், சிகிச்சை முகாம்கள் நடத்த வேண்டுமென்ற முறையிலே ஆங்காங்கே உள்ள கல்லூரி மாணவர்கள் மூலமாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அவர்கள் சென்று அதை நடத்திக்கொண்டு வருகிறார்கள். இலவசமாக பல்பொடி பொட்டலம் சத்துணவு மையங்களிலே கொடுத்துக் கொண்டு வருகிறோம் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, புதிதாக பல் மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கு வெளிநாட்டிலிருந்து கோடிக்கணக்கான ரூபாய் உதவி செய்கிறார்கள் என்று தெரி

கிறது. ஆனால் மத்திய அரசு மூலம்தான் அது வரவேண்டும் என்ற நிலைமை இருப்பதால் நேரடியாக அதைப் பெறுவதற்கு நம்முடைய அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே : அது இயலாத காரியம். வெளிநாட்டுப் பணமாக இருந்தாலும் அல்லது உதவியாக இருந்தாலும் அது எல்லாம் மத்திய அரசாங்கத்தின் மூலமாகத்தான் வரவேண்டும். அண்மையிலே ஒரு செயற்குறிப்பு வந்தது. இரண்டு கோடி ரூபாய் சென்னையிலே உள்ள நம்முடைய மெட்ராஸ் டென்டல் காலேஜிற்கு நிதி தருவதாக எப்.டி.ஆர். ஒத்துக்கொண்டிருக்கிறது. நாம் மத்திய அரசாங்கத்தின் மூலமாகத்தான் அதைப் பெறவேண்டும். நாம் மத்திய அரசாங்கத்தை அணுகியிருக்கிறோம். வெகு விரைவிலே வரும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் - விடைகள் நேரம் இத்துடன் முடிகிறது. இன்னும் வினாப் பட்டியலில் உள்ள 6 வினாக்களுக்கு விடை அளிக்கப்பெறவில்லை. அவற்றை அச்சிட்டு உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கிறேன்.

(முற்பகல் 10-00)

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இது போலவே வினாக்களுக்கு விடையளிக்க முடியாதுபோன நிலைமை முன்பு ஒரு சமயம் ஏற்பட்டது. அப்போது ஒரு தீர்ப்பு வழங்கினீர்கள். ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பார்லிமெண்டில் வினாக்கள் - விடைகளுக்கு ஒரு மணி நேரத்திற்கு மேல் எடுத்துக் கொள்வது கிடையாது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, வினாக்கள்-விடைகள் நேரத்தில்தான் பல முக்கியமான தகவல்களை அறிந்து கொள்ள, உறுப்பினர்கள் துணைக் கேள்விகள் போடுவதற்கு வாய்ப்பு இருக்கின்றன (குறுக்கீடு) அதனால் இந்த மன்றம் மட்டும் அல்லாமல் வெளியில் உள்ள மக்களும் பல செய்திகளைத் தெரிந்து கொள்ள வாய்ப்பாக இருக்கிறது. இதுபோன்று பல கேள்விகளைக் கேட்க வேறு சந்தர்ப்பம் எங்களுக்கு இல்லை. தயவுசெய்து நீங்கள் ஒவ்வொரு கேள்விக்கும் 5 நிமிடம்; 10 நிமிடம் என்று வைத்துக்கொண்டு எல்லாக் கேள்விகளையும் எடுத்துக்கொள்ள அனுமதிக்கவேண்டும். இப்போது 20 கேள்விகள்தான் பட்டியலில் போடுகிறீர்கள். அதிலும் மூல வினா கேட்டவருக்கு இரண்டு துணை வினா, மற்றவர்களுக்கு ஒரு துணை வினா என்கிற முறையில்தான் கேட்க அனுமதிக்கிறீர்கள். அப்படி உள்ளபோது இல்லாத ஒரு மரபை தயவுசெய்து ஏற்படுத்த வேண்டாம் (குறுக்கீடு)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1984 மார்ச் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லாத மரபு இல்லை. இன்று காலையில் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் அனல் மின்சாரத்தில் ஆரம்பித்து மின்சாரத்தைப் பற்றி விளக்கமாகக் கூறினார்கள். அவரது கேள்விக்கு 22 நிமிடங்கள் ஆனது; அதன் பிறகு மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் மரங்கள், காடுகளைப் பற்றி விளக்கமாக எடுத்துக் கூறினார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன்: இவை எல்லாம் முக்கியமான கேள்விகள், சமுதாயத்திற்குத் தேவையான கேள்விகள்தான் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லாம் முக்கியமான கேள்விகள்தான். நான் இல்லை என்று சொல்லவில்லை. முன்னால் இருப்பவர்கள் துணை வினாக்கள் பல கேட்டுள்ளார்கள். இன்று பல பேர்கள் பின்னால் கையைத் தூக்கியும் நான் அவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க நேரமில்லை. எனக்கு இருக்கிற நிலைமைகளை எடுத்துச் சொல்கிறேன். இன்று 6 சட்ட முன்வடிவுகளை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டாக வேண்டும். முக்கியமான ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் வர இருக்கிறது. எவ்வளவு நேரம் இதற்கு ஆகும் என்று தெரியவில்லை. வேண்டுமானால் அவையை மாலையில் வைத்துக்கொள்ளலாம். எனக்கு ஆட்சேபணை இல்லை. நான் இரவு பத்து மணி வரை ஆனாலும் அவையில் இருப்பதற்குத் தயாராக இருக்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: சட்டசபைக் கூட்டம் இன்னும் பல நாட்கள் தொடர்ந்து நடக்கும். இன்றைக்கு விடுபடும் கேள்விகளை நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது; பட்டியலில் விடுபெற்ற மற்ற கேள்விகள் பிரிதொரு நாளன்று எடுத்துக்கொள்ளப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

மதுரை தமிழ்நாடு அரசு தொழில்நுட்பக் கல்லூரி விடுதியில் நடைபெற்ற முறைகேடுகள்.

1—வினா 1425—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையிலுள்ள தமிழ்நாடு அரசு தொழில் நுட்பக் கல்லூரி விடுதியில் நடைபெற்ற முறைகேடுகள் பற்றி விசாரணை நடத்துமாறு கோரி விடுதி மாணவர்களிடமிருந்து அரசுக்கு கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?